# சமஷ்டி தீர்வுக்கு சிங்கள கட்சிகள் பின்னடிப்பு!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 3 இதழ் 317
யாழ்ப்பாண ஞாயிற்றுக்கிழமை 18-12-1994

(கொழும்பு)
இலங்கை இனப் பிரச்னைத் தீர்வுக்கு சமஷ்டித் தீர்வை முன்வைப்பதற்கு சகல சிங்கள அரசியல் கட்சிகளும் பின்நிற்பது கவலை தருவதாக ஜேர்மனியின் 'ஹைடில் போர்க்' தென்னாசிய நிறுவக பிரமுகரான திரு. சியாக ஹன்சர்ட் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஜேர்மனியின் இலங்கை அறிஞர்களின் கருத்தரங்கொன்று இடம்பெற்ற

(6ம் பக்கம் பார்க்க)

## 2-ம் கட்ட பேச்சு குறித்து இந்தியா அவதானிப்பு

(கொழும்பு)
அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெறப்போகும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இருபகுதியினருக்கும் இடையிலான குறிப்பிட்ட பேச்சுக்

(6-ம் பக்கம் பார்க்க)

## படையினரை மீற முடியாதநிலையில் சந்திரிகா

(கொழும்பு)
சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், போக்குவரத்துப் பாதைத் திறப்பு ஆகிய விடயங்களில் இராணுவத்தினரை மீறிச் செயற்பட முடியாத நிலையில் ஜனாதிபதி சந்திரிகா இருப்பதாக கொழும்பு பத்திரிகை

(6ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை விவகாரத்தில்

# இந்தியாவின் கட்டுப்பாட்டில் சந்திரிகா செயற்படுகிருர்!

### கொழும்பு பத்திரிகை கூறுகிறது

[கொழும்பு]
இனப் பிரச்னை விவகாரத்தில் இலங்கை ஜனாதிபதி திருமதி சந்திரிகா இந்தியாவின் கட்டுப்பாட்டிற்கு உள்ளேயே செயற்படுவதாகவும் தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அப் பத்திரிகை தெரிவிக்கையில்; இனப் பிரச்னை விடயத்தில் இந்தியாவின் உதவி தேவை என்ற கருத்தை மனதில்கொண்டே மேலும் இந்தியா சொல்லும் விடயங்களுக்கெல்லாம் ஜனாதிபதி சந்திரிகா காது கொடுக்க வேண்டியுள்ளது. மறைமுகமாக இந்தியா தனது அழுத்தங்களையும் இலங்கை அரசு மீது திணித்து வருகிற... புலிகளுடனான பேச்சுக்களில் இலங்கை அரசை வழிநடத்தும் சக்தியாக கூட விளங்க

(6-ம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாதம் ரணிலுக்கு திருமணம்

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் திருமணம் செய்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

45 வயதைக் கடந்துள்ள திரு. ரணிலை மணமுடிக்கப் போபவர் பல்கலைக்கழக விரிவுரையாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் கொழும்பு நகரைச் சேர்ந்தவராம்.

(6ம் பக்கம் பார்க்க)

★ புத்தக விவகாரம்:

## 'போப்' மன்னிப்பு கோர திருச்சபை கேட்க வேண்டும்

(கொழும்பு)
பௌத்த மதம் பற்றி போப்பாண்டவர் கூறிய கருத்துக்களுக்கு மன்னிப்புக்கேட்குமாறு இலங்கை கத்தோலிக்க திருச்சபைபோப்பாண்டவரை கேட்க வேண்டுமென்று கத்தோலிக்க குருவானவரான அலோய் பீரிஸ் பி. பி. சி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

## சந்திரிகா அரசை கவிழ்க்க ஐ.தே.க. முயற்சிக்கமாட்டாது

-- ரணில் கூறுகிருர்

(கொழும்பு)
தற்போதைய பொதுசன முன்னணி அரசை கவிழ்க்கும் நோக்கம் ஐ. தே. விற்கு இல்லை என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐ தே. கவின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்; அங்கு அவர்மேலும் பேசுகையில்; தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற பொ. ச. மு. அரசுக்கு நாங்கள் வாய்ப்பளிப்போம்.

அண்மைக்காலமாக நாட்டில் நிலவும் பல பிரச்னை

(6ம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகள் பேச்சுக்களின் பின்பேயுத்தநிறுத்தம் அமுல்?

(கொழும்பு)
அரசுக்கும்- விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறும் இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களின் பின்பே யுத்த நிறுத்தம் அமுல் செய்வது பற்றி முடிவு செய்யப்படலாமென 'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன.

யுத்தநிறுத்தகாலத்தில்மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளுடன் பல விடயங்கள் குறித்து பேசி தெளிவுபெற வேண்டியிருப்பதால் அடுத்த கட்ட பேச்சின்பின்பே பெரும்பாலும் இருதரப்பும் இணங்கும் யுத்த நிறுத்தம் ஏற்படலாமெனக் கூறப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களுக்கு எதுவித நிபந்தனையும் அறிவிக்காது அரச பிரதிநிதிகள்

[6ம் பக்கம் பார்க்க]

## ஐ. தே. க. மாநாட்டில் ஹேமா. சிறிமா பங்குபற்றினர்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் ஹேமா பிரேமதாசா, சஜித் பிரேமதாச, சிறிமா திசாநாயக்கா, நவீன் திசாநாயக்கா ஆகியோர் நேற்று பங்குபற்றினர் என்று பி. பி. சி. 'சந்தேசிய' தெரிவித்தது.

ஐ. தே. க. வின் புதிய தலைவராக திரு. ரணில் தெரிவு செய்யப்பட்டதை நேற்றைய மாநாடு எதுவித எதிர்ப்பும் இன்றி உறுதிப்படுத்தியது.

(6ம் பக்கம் பார்க்க)

எகிப்தில்

## விபத்தில் சிக்கி அநுரா காயம்

(கொழும்பு)
ஐக்கியதேசியக் கட்சி அங்கத்தவரான அனுரா பண்டாரநாயக்கா விபத்தொன்றில் சிக்கி காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் தலைநகர் கெய்ரோ நகரில் இந்த விபத்து ஏற்பட்டது.

திரு. அநுரா பண்டாரநாயக்கா எகிப்துக்கு விஜயம் செய்திருந்தபோது அவர் விபத்தில் சிக்கியதாக கூறப்படுகிறது.

மேலதிகசிகிச்சை பெறுவதற்காக அவர் உடனடியாக நாடு திரும்ப விருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இ-சி

## உலக வங்கி பிரதிநிதிகள் குழு விரைவில் யாழ்ப்பாணம்வரும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்துக்கான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை விரிவாக ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டும் உலக வங்கியைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று விரைவில் யாழ். மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதன் காரணமாக யாழ். மாவட்டத்துக்கான புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்தவேண்டுமென யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1342)

### கடனுதவி

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கிழக்கு உற்பத்திக்குழு பகுதியைச் சேர்ந்த மேட்டுநில பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு வங்கி மூலம் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

இக்கடனை பெறவிரும்பும் விவசாயிகள் உடனடியாக வட்டு கிழக்கு உற்பத்திக்குழுவுடன் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது: (72)

கூட்டுறவு பயிற்சி நெறிக்கு

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் அடுத்த ஆண்டு ஜனவரி 10ம் திகதி ஆரம்பமாக இருக்கும் கூட்டுறவு தராதரப் பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பம் செய்பவர்கள் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராயும் அல்லது க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்தியவராயும் இருத்தல்வேண்டும். வெற்றிடங்கள் இருந்தால் மாத்திரம் வெளிவாரிமாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 20ம் திகதியாகும். விண்ணப்பப் படிவங்களை யாழ். மணிக்கூண்டு வீதியிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. -71-சி

# 2000 பக்கட் திரிபோஷ யாழ். வந்தது

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு அண்மையில் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து 2000 பக்கட் ''திரிபோஷ'' மா கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்.சுகாதார பிராந்தியத்திலுள்ள சகல சிறுவர் நல சிகிச்சை நிலையங்களுக்கும், மற்றும் அரசினர் வைத்திய சாலைகளிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் கிளினிக்குகளுக்கும் இந்த திரிபோஷ மா பங்கீடு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கும், போஷாக்கு குறைந்த கர்ப்பிணி தாய்மாருக்கும் இந்த 'திரிபோஷ' மா இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. -72-சி

# மாடு வெட்டியவர்கள் காவல்துறையால் கைது

(உடுவில்)

சட்ட விரோதமாக மாடு வெட்டினார்கள் என்பதற்காக சுழிபுரம் பெரிய புலோவைச் சேர்ந்த இரு நபர்களை சங்கானை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.

காவல்துறையினருக்கு கிடைத்த தகவலைதொடர்ந்து மேற்படி ஸ்தலத்துக்கு விரைந்த காவல்துறையினர் மேற்படி இரு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீது சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (109)


நத்தார் - புதுவருடத்தை முன்னிட்டு
5-12-94 தொடக்கம் 31-12-94வரை

## மலிவு விற்பனை

★ சகலவிதமான புடவைகளுக்கும் விசேட கழிவுண்டு.

வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

## லைடன் புடவை நிலையம்

[தீவகம்]

249, இராசன் வீதி [மின்சாரநிலைய வீதி]
யாழ்ப்பாணம்.

(எ-4566)


## யாழ்ப்பாண மாநகரசபை

# கேள்வி அறிவித்தல் - 1995

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட இறைச்சிக் கடைகள், கோழிக்கடை, கருவாட்டுக் கடைகளை 01-01-1995 முதல் குத்தகையில் கொடுப்பதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 100/-உம் மீளப் பெறக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 2500/-ம் செலுத்தி 22-12-94ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விகள் 23-12-94ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்களுக்கு 09-11-94ஆம் திகதிய இதே பத்திரிகை விளம்பரத்தைப் பார்க்கவும். மேலதிக விபரங்களை யாழ். மாநகரசபையின் நானுவித இறை வரிப் பகுதியில் அறிந்து கொள்ளலாம்

அட்டவணை — 1 [ மீளக் கேள்வி கோரப்படுபவை ]

| இறைச்சிக் கடைகள் | குத்தகை காலம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 01. குருநகர் ஆட்டிறைச்சிக் கடை இல. 7 | 1 வருடம் | 14,315-00 | 195-00 |
| 02. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 1 வருடம் | 51,000,00 | 135-00 |
| 03. பாஷையூர் மாட்டிறைச்சிக் கடை இல. 3 | 1 வருடம் | 50,000-00 | 135-00 |
| 04. நரிக்குண்டு மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 63,000-00 | 135-00 |
| 05. செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 1 வருடம் | 20,000-00 | 112-50 |
| 06. புங்கன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1 வருடம் | 26,000-00 | 200-00 |
| 07. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை இல. 7 | 1 வருடம் | 5,150-00 | 200-00 |
| 08. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 8 | 1 வருடம் | 4,175-00 | 200-00 |
| 09. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 9 | 1 வருடம் | 5,300-00 | 200-00 |
| 10. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை இல. 5 | 1 வருடம் | 16,000-00 | 112-50 |

அட்டவணை — 11 [ புதிதாகக் கேள்வி கோரப்படுபவை ]

| | | | |
|---|---|---|---|
| 01. நாவாந்துறை கருவாட்டுக் கடை இல. 11, 12, 13 | 5 வருடம் | 10,000 | 200-00 |
| 02. நாவாந்துறை கோழிக் கடை இல. 10 | 1 வருடம் | 5,000 | 200-00 |

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
17-12-1994.

(ஏ-4592)

## தமிழீழ நிர்வாக சேவை
## வேலைப்பகுதி
# வேலைவாய்ப்புக்கள்

வேலைப்பகுதி, வேலைத்தளத்தில் பின்வரும் பணிநிலைகளில் கடமையாற்ற விரும்பும் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 1994 - 12-18 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 1994 - 12 - 21 புதன் கிழமை வரை நடைபெறவுள்ளது.
தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

நேரம்: மு. ப. 9-00 மணியிலிருந்து 12-00 மணிவரை

1. இயந்திரவியல் முகாரி (Mechanical Foremen)
   - (அ) தேசிய தொழில் நுட்ப (மெக்கானிக்கல்) டிப்புளோமா N. D. T Mech) தகமைச் சான்றிதழுடன் குறைந்தது இரண்டுவருட அனுபவம்.

     அல்லது
   - (ஆ) தேசிய தொழில் நுட்பவியல் தேர்வு (இயந்திரவியல்)(N. C. T, Mech) ஐந்து வருட அனுபவம்.

     அல்லது
   - (இ) இவற்றுக்குச் சமமான வேறு தராதரம்.
   - (ஈ) நீண்ட கால அனுபவமுடையவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.
2. வாகனங்கள் திருத்துனர்கள்
   - (அ) மோட்டார் சைக்கிள் திருத்த வேலை
   - (ஆ) கார், வான் முதலிய இலகு வாகனங்கள் திருத்தும் வேலை.
   - (இ) கனரக வாகனத்திருத்த வேலை.
   - (ஈ) வாகனங்களுக்கு பொடி அமைக்கும் வேலை. (கூடார வேலை)
   - (உ) வாகனங்களுக்கு மின் இணைப்பு வேலை. [ஏ. சி. (A. C) யும் டி. சியும் (D. C) தெரிந்தவர்கள்.
3. களஞ்சியக் காப்பாளர்
   - (அ) மூலப்பொருள் விநியோகம், இயந்திரவியல் சம்பந்தமான களஞ்சிய முகாமைத்துவம் போன்றவற்றைப் பேணும் அங்கீகரிக்கப்பட்ட அரச / தனியார் நிறுவனமொன்றில் களஞ்சியக் காப்பாளராக குறைந்தது ஐந்து வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்,

     அல்லது
   - (ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அல்லது அதற்குச் சமமான அரச/தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது நான்கு வருட தொழில் அனுபவம் உடையவர்கள்.
4. தொழிலாளர்கள்

   பயிற்றப்பட்ட தொழிலாளர்களும் (வீதி வேலை, தார் வேலை, தச்சு வேலை, மேசன் வேலை உட்பட) சாதாரண தொழிலாளர்களும் அடங்குவர்.

இடம்: வேலைப் பகுதி

தமிழீழ நிர்வாக சேவை,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்.
தமிழீழ நிர்வாக சேவை.

(எ 4593)

நூலகம் யாழ்ப்பாணம்

# இலங்கை தூதரகங்கள் புனரமைப்பு செய்யப்படும்

## –ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களைப் புனரமைப்பு செய்யவேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயர் ஸ்தானிகர்களாகவும், தூதுவர்களாகவும் நியமிக்கப்பட்டவர்களுக்காக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

செயல்திறமையுள்ள வெளிநாட்டு தூதுவர்களை உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் நாட்டின் பொருளாதாரா நலன்களை ஊக்குவிக்க வேண்டும்.

மூன்றும் உலகில் பலம்வாய்ந்த ஒரு சக்தியாக இலங்கை விளங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

எனவே வெளிநாட்டுச் சேவை இதில் முக்கிய பங்கை வகிக்கமுடியும். முன்னைய ஆட்சியின்கீழ் மனித உரிமைகள் மீறப்பட்டன. பொது வாழ்வில் ஊழல்கள் மலிந்திருந்தன இதனால் ஏற்பட்ட அவப்பெயரை நீக்குவது அவசியம்.

புதிய அரசாங்கம் சகல விடயங்களையும் பகிரங்கமாகவே மேற்கொள்ளும். மனித உரிமைகளையும் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டும்.

சகல மக்களுக்கும் நன்மை ஏற்படும் விதத்தில் தாராளப் பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்படும், உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளும் ஊக்குவிக்கப்படும் என்றார்.

(இ)

# பனிச் சரிவில் இந்திய ராணுவம் புதையுண்டது

(புதுடில்லி)

லடாக் பகுதியில் பெரும் பனிப்பாறை சரிவில் பல ராணுவவீரர்கள் புதையுண்டு போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதையுண்ட ராணுவவீரர்கள் எத்தனைபேர் என்பது இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

லடாக் பகுதியில் வழக்கமான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த சமயம் இவர்கள் பனிப்பாறை சரிவில் புதையுண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன:

காணாமல் போன இந்த இராணுவத்தினரைத் தேடிக் கண்டு பிடிக்கும்பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

# விவசாயஉற்பத்தியை மேலும் விருத்தி செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெருக்கடிமிக்க இன்றைய சூழ்நிலையில் எமது மக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு எமது பிரதேசத்தின் விவசாய உற்பத்தியை மேலும் விருத்தியடையச் செய்யவேண்டும். இதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் தலைமையில் விவசாய அபிவிருத்திசம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி விடயங்கள் ஆராயப்பட்டன.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் குழுஉறுப்பினர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இப்பிரதேசத்தின் விவசாய உற்பத்தியை மேலும் விருத்தியடையச் செய்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

விவசாய உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்கு நல்ல இன விதைகளையே முன்கூட்டியே தெரிவுசெய்து களஞ்சியப்படுத்தி வைத்துக கொள்ளவேண்டும். அத்துடன் அதற்கான பசளை வகைகளையும், கிருமி நாசினிகள் போன்றவைகளையும் சேகரித்துக் கொள்ளவேண்டும். இதற்கான தரவுகளை அந்தந்த பகுதி விவசாய உற்பத்தித் திணைக்கள அதிகாரிகள் விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது, (162-சி)

# தங்கக் கடத்தல் கொழும்பில் முறியடிப்பு

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து இலங்கைப் பிரசை ஒருவர் உள்நாட்டுக்குள் பெருந்தொகையான தங்கத்தைக் கடத்த முற்பட்டதனால் அவருக்கு 96 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி நபர் சிங்கப்பூரிலிருந்து 8525 கிறாம் தங்கத்தைக் கடத்த முற்பட்ட போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்,

தங்கத்தைக் கடத்த முற்பட்ட குற்றத்துக்காக இந்த நபருக்கு சுங்கத் திணைக்களம் 96 லட்சம் ரூபாவை அபராதமாக செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளது. -வி.கே-இ

# தேர்தல் வழக்கு தள்ளுபடியானது

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின் போது இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து நான்கு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அண்மையில் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேற்படி வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டபிள்யு ன். டி. பெரேரா இவ்வழக்கை தள்ளுபடி செய்தார்.

பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரே இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். -க-இ

# நல்லபணி செய்வோரை இந்த மண் ஒருபோதும் மறக்காது

## — புதுவை உரை

(யாழ்ப்பாணம்)

''காலத்தின் தேவைகளை உணர்ந்து எமது விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சிறப்புக்களைச் சித்தரிக்கும் வகையில் எமது வெளியீடுகள் அமைகின்றன. நாம் இன்று கடுகதி வேகத்தில் பயணப்பட்டு வருகின்றோம். இந்த வகையில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மூன்று வெளியீடுகளை இன்று வெளியிட்டு வைக்கின்றது.''

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மாணவர்அமைப்பினால் வெளியிடப்பட்ட 'சுவடுகள்', 'இதயநாதம்', 'எங்கள் தாய்த் திருநாடு' ஆகிய மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய கலை, பண்பாண்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை. இரத்தினதுரை இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. புதுவை. இரத்தினதுரை தொடர்ந்து உரையாற்றுகையில்: இன்று வெளியிடப்படும் இந்த வெளியீடுகள், எமது விடுதலைப் போராட்டத்தில் இணைந்து, பல போர்முனைகளைச் சந்தித்து மாவீரர்களான ஆறு மாவீரர்களையும் எமது போராட்டத்துடன் தம்மை அர்ப்பணித்து வந்த பதினாறு மாணவர்களையும் எடுத்துக்காட்டும்வெளியீடாக அமைகின்றது.

எமது தாயகப் பூமியில் நல்ல பணி செய்பவர்களை, இந்த மண் ஒருபோதும் மறக்காது. எமது போராட்ட வரலாறுகள், விபரக் கொத்துக்களை இன்று வெளியிடப்படும் 'தாய்த் திருநாடு' என்ற நூலில் மிகத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன. காலத்திற்கு ஏற்ற வகையில் எமது வெளியீடுகள் இந்த மண்ணின் சோக வரலாறுகளை எடுத்துக் காட்டி வருகின்றன. இந்த வகையில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மாணவர் அமைப்பின் இந்த முயற்சியை வரவேற்பதுடன், தொடர்ந்தும் எமது தேசத்தின் வளர்ச்சிக்கும், எமது மாணவர்கள் பயன்பெறக் கூடிய வகையிலும் பல நல்ல ஆக்கங்களை வெளியிடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் உரையாற்றுகையில்: பல்வேறு நெருக்கடிகளைக் கொண்ட இக்காலகட்டத்தில், இந்த நூல்கள் வெளியிடப்படுவது எமது மாணவர் அமைப்பின் முன் முயற்சியைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்த நூல்கள் கொள்கை மிக்க எமது போராட்ட வரலாறுகளைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. எமது மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாது, விளையாட்டு, கலை, பண்பாடு போன்றவற்றிலும் தம்மை முன்னெடுத்துச் செல்வது பெருமைக்குரியது. எமது தேசியத் தலைவர் காலத்திற்குக்காலம் வெளியிட்டு வந்த சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக இந்த நூல் அமைகின்றது.

தமிழீழ வரலாறுகள் பற்றியும், தமிழீழத் தேசியக்கொடி பற்றிய கருத்துக்களும், கரும் புலிகள் மற்றும் தேசியத் தலைவர் பற்றிய கருத்துக்களும் இந்நூல்களில் வெளியிடப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், எமது தேசியத் தலைவருக்கும் உறுதுணையாக நின்று செயற்பட்டு வரும் இந்த மாணவர் அமைப்பு, தொடர்ந்தும் தமது பணியை முன்னெடுத்துச் செல்லவேண்டும்எனவும் அவர் தெரிவித்தார். 162-சி

# கையூட்டு ஊழல் ஆணைக் குழு :விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆகிய குற்றச் சாட்டுகளை விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அதன் விசாரணைகளை நேற்று ஆரம்பித்தது.

பொதுசன ஐக்கிய முன்னணித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க ஊழல். லஞ்சம் ஆகியவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கையின் ஆரம்பம் இதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடையூறுகளுக்கு ஏற்ற விதத்தில் விசாரணைகளைமேற்கொள்ள இந்த ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. -கே-இ-ரி

காரை நகர்

# மணிவாசகர் சபையின் மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் 'மணிவாசகர்விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு சித்தன் கேணி சிவசிதம்பரஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது:

பண்டிதர் மு. சு. வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீனமும், வாழ்த்துரையை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் நிகழ்த்துவர், சிறப்புச் சொற்பொழிவாக 'திருப்பெருந்துறையுறை சிவபெருமானே' என்னும் தலைப்பில் திரு, க. பாலசுப்பிரமணியம் உரை நிகழ்த்துவார்,

இதைத் தொடர்ந்து மணிவாசகர்சபை நடாத்திய சமய பாடப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளை பெற்ற மாணவர்க்கு தங்கப்பதக்கமும், முதன்மை சித்தியடைந்த 45 மாணவர்க்கு பரிசில்களும் வழங்கப்படும், (சி)

யாழ்ப்பாண—

# தொழில்நுட்ப கல்லூரியை தரமுயர்த்த கோரி மகஜர்

(உடுவில்)

''யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி சகல வசதிகளும் கொண்டதாக விளங்குவதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படவேண்டும். ஏனைய முதலாம்தர தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கு கொடுக்கப்படும் சலுகைகளும் வசதிகளும் இக்கல்லூரிக்கு வழங்கப்பட வேண்டும்''

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியின் மாணவர் பேரவை ஜனாதிபதியிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறது,

ஜனாதிபதிக்கு மாணவர் பேரவை சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள் மகஜரில் தொழில் நுட்பக் கல்லூரியில் தொழில் நுட்பப்பயிற்சி நெறிகளை பயின்று சித்தியடைபவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் எனவும் தூர இடங்களில் இருந்து வந்து பயிற்சி நெறிகளை மாணவர்கள் மேற்கொள்வதற்கு வசதியாக விடுதி வசதிகள் செய்து தரப்படவேண்டுமெனவும் கணனி மற்றும் ஆய்வு வசதிகள் ஏற்படுத்தி தரவேண்டுமெனவும், பொறியியல் துறைக்கான உயர் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியில் மேற்படிப்பை மாணவர்கள் தொடர்வதற்கு வசதிகள் செய்து தரப்படவேண்டுமெனவும், நிரந்தர அதிபர், உபஅதிபர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுள்ளார்கள், (109-சி)

# முதுகுவலி, முதுகு உளைவிற்குரிய காரணங்கள்

வைத்திய கலாநிதி
எஸ். பி. ஆர். சீர்மாறன்

முதுகுவலி, முதுகு உளைதல் அனைத்து வயதினரையும் ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கின்ற ஓர் முக்கியமான மருத்துவப் பிரச்னையாகும். இதனால் தனிமனிதர்களுக்கும், குடும்பத்திற்கும், தேசத்திற்கும் பாதிப்பும் பொருளாதார நட்டமும் ஏற்படும். உதாரணமாக புள்ளிவிபரப்படி இங்கிலாந்தில் மாத்திரம் வருடந்தோறும் 375,000 பேர் முதுகு வலியினால் பாதிக்கப்படுகிறார்களாம் இவர்களால் அந்த நாட்டிற்கு 11·5 மில்லியன் வேலை நாட்கள் இழப்பு (Annual loss) வருடமொன்றிற்கு ஏற்படுகின்றது.

## முதுகு

தலையையும் இடுப்பெலும்பையும் இணைக்கின்ற முள்ளந்தண்டுத் தொகுதியே முதுகு என பொதுவாகக் குறிப்பிடுகின்றோம். மருத்துவ ரீதியாக முதுகை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றோம். அதாவது கழுத்துப்பகுதி [cervical] நெஞ்சுப்பகுதி [Thoracic], வயிற்றுப்பகுதி ]Lumbar], இடுப்புப்பகுதி ]Sacıum] முனைப்பகுதி [coccyx] மேலும் இவை யாவும் வட்டவடிவமான சிறிய எலும்புகளின் சங்கிலித்தொடர் போன்ற இணைப்பாகும். ஒன்றின்மீது ஒன்று மிருதுவாக செயற்படுவதற்கும், உராய்வு காயம் என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் மற்றும் நாம் குனிவதற்கும் சரிவதற்கும் நடப்பதற்கும் ஓடுவதற்கும் பாய்வதற்கும் ஏற்ப இவற்றினிடையே தட்டு [Disc] போன்ற அமைப்பு இருக்கின்றது. முதுகெலும்பின் முக்கியமானபணி மூளையிலிருந்து உடலின் அனைத்து தொழிற்பாடுகளையும், செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும் முண்ணான் நரம்புத்தொகுதி [Spinalcord] பாதுகாப்பதாகும். மேலும் எமக்குரிய உருவ அமைப்பையும் உயரத்தையும், கம்பீரத்தையும் கொடுப்பது எமது முதுகெலும்பாகும். இதனால் தான் கோழையைக்கூட 'முதுகெலும்பில்லாதவன்' என குறிப்பிடுவது வழக்கம்.

## காரணிகள்

மனதிலுள்ள அழுத்த பிரச்னையே முதுகில் வலியாக வெளிப்படுவதற்கு மிகமுக்கிய காரணமாகும், கிருமிகள் படிதல், கசநோய். புற்றுநோய், சாதாரண கட்டிகள், தட்டு விலகுதல், மூட்டுக்களில் ஏற்படுகின்ற வியாதி, எலும்புகளில் உள்ள கல்சியம் போன்ற மூலப்பொருட்கள் நலிவடைதல், அனைத்து மூலப்பொருட்களும் விலகிச் செல்லுதல், பஜட் டிஸீஸ், ஹை பேர்பராதைரோடியம், பாரமான பொருட்களை சடுதியாகத் தூக்குதல், வீதிவாகன விபத்து, மோட்டார்சைக்கிள் விபத்து, சைக்கிளிலிருந்து விழுதல் முதுகில்பலமாக அடிவிழுதல், காலில் ஏதேனும் வியாதி இருந்து நீண்டநாட்களுக்கு ஒருபக்கம் சரிந்து அல்லது குனிந்து நடத்தல், பெண்கள் கர்ப்பவதிகளாக இருக்கின்றபோது, அளவுக்குமீறிய உடல்நிறை உடல்பருமன் கொண்டவர்கள், முதுகெலும்பில் பிறப்புக்குறைபாடு உடையவர்கள், மற்றும் முதுகெலும்பில் இணைக்கப்பட்டிருக்கும தசைநார்கள் இழுபடுதல், நசிபடுதல் உதாரணமாக விளையாட்டு வீரர்களுக்கும் மற்றும் கடுமையான உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் இந்தப்பிரச்னை ஏற்படலாம். ஒரு காரணமுமே இல்லாமலும் முதுகுவலி ஏற்படலாம்.

மேலும் உடலில்வேறு உறுப்புக்களில் எற்படுகின்ற பிரச்னைகளாலும் முதுகுவலி ஏற்படும். உதாரணமாக சிறுநீரகங்களில் கற்கள் இருத்தல் கட்டிகள் வளருதல் கிருமிகள் படிதல், சிறுநீரகங்கள் வீங்குதல், பெண்களின் கருப்பையில் மாதவிடாயில் வலிஏற்படாமல் இருத்தல், கட்டிகள் வளருதல், சூலகத்தில் கட்டிகள் வளருதல், நெஞ்சிலுள்ள உணவுக்குழாயில் எரிச்சல், புற்றுநோய் என்பன இருத்தல் சதையியில் கிருமிகள் படிதல், புற்றுநோய் இருத்தல், பாரிய இரத்தக்குழாயில் வெடிப்பு ஏற்படுதல், பித்தப்பையில் கிருமிகள் படிதல், உணவுத் தொகுதியில் கட்டிகள், கிருமிகள் படிதல் என்பவற்றின்போதும் முதுகில் வலி உளைவு ஏற்படும்.

எறிகணையின் துண்டு, துப்பாக்கிச் சன்னம், விமானக் குண்டின் சிறுபகுதி முதுகைத் தாக்கி எலும்பில் அல்லது உள்ளே முண்ணான் நரம்புத் தொகுதியில் காயங்களை ஏற்படுத்துகின்றபோதும் கடுமையான முதுகுவலி ஏற்படலாம். சன்னங்கள் நீண்டகாலத்திற்கு தங்கியிருந்தாலும் வலி ஏற்படலாம்.

## அறிகுறிகள்

முதுகு வலி சடுதியாகவும் ஏற்படலாம், படிப்படியாகவும் ஏற்படலாம். சடுதியாக ஏற்படுவதற்கு பெரும்பாலும் விபத்துக்களே காரணம். எனவேதான் வீதிவாகனவிபத்துக்களின்போதும், மரங்கள், உயரமான கட்டிடங்கள் என்பவற்றிலிருந்து விழுகின்றபோதும் முதுகில் கடுமையான வலி ஏற்பட்டால் காயப்பட்டவரை கண்டபடி அசைக்கவோ தூக்கவோ கூடாது. இது நரம்புத் தொகுதியை மேலும் பாதிப்படையச் செய்யும். மிகவும் அவதானமாக உடல் முழுவதையும் பலகையுடன், வாங்குடன் கட்டியே நோயாளியை காவிச் செல்லவேண்டும். படிப்படியாக ஆரம்பிக்குமாயின் முதுகெலும்பில் ஏதேனும் வேறுபிரச்னைகள் இருக்கலாம். முதுகெலும்பினூடாகவே உடல் முழுவதற்குமான நரம்புகள்செல்வதனால், முதுகுஎலும்பில் பாதிப்பு ஏற்படுகின்ற பகுதியில் அல்லது அதற்குக் கீழுள்ள நரம்புகள் பாதிப்படையலாம். இதனால் உணர்ச்சியிழப்பு, ஊசியினால் குத்துதல் போன்ற உணர்வு என்பன ஏற்படும். முதுகு வலியுடன், நிறை குறைதல், இருமல், காய்ச்சல் என்பனவும் இருக்குமாயின் விரைவாக மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

## சிகிச்சை முறை

அண்மையில் திடீரென முதுகு வலி ஏற்பட்டவர்கள், நீண்டகாலத்திற்கு முதுகுவலி இருத்தல் போன்றவர்கள் மருத்துவ ஆலோசனையை காலம்தாழ்த்தாது பெறுவது நல்லது. சிறுநீர் மற்றும் இரத்தம் (ESR) என்பவற்றைப் பரிசோதிப்பதோடு தேவைப்படின் 'எக்ஸ்ரே' எடுத்து பிரச்னை என்னவென்று கண்டுபிடிக்கப்படும். நோய்க்கேற்றவாறு மருந்துகள் கொடுக்கப்படும். வழமையாக பனடோல், அஸ்பிரின், இன்டோசிற், பொன்ஸ்ற்றன், புருபன் போன்ற குளிசைகள் பயன்படுத்தலாம். முதுகுவலிவேறு ஏதேனும் காரணத்தினால் ஏற்படுகின்றதென்றால் அதற்குரிய விசேட சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## ஆலோசனைகள்

உடல்நிறை, உடல் பருமன் கூடியவர்கள் தமது உடல் நிறையைக் குறைத்துக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது மிகவும் முக்கியமானதாகும். அடிக்கடியும் அதிகளவு சீனியுடனும் தேநீர் குடிப்பதையும், சிற்றுண்டிகள் சாப்பிடுவதையும் இரவினில் சேர்த்து அதிகளவு உண்ணுவதையும் குறைக்க வேண்டும். நாள்தோறும் குறைந்தது 35 நிமிடங்கள் வரை ஆறுதலாக நடப்பது நல்லது. மரக்கறி, இலைவகை, கரட், உழுந்துவகை உணவுகள் போன்றவற்றை மாற்றீடாக உண்ணுவதனால் உடல் நிறையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம். சடுதியாக பாரமான பொருட்களைத் தூக்குவதைத் தவிர்க்கவேண்டும். 40 வயதிற்கு மேல் கடுமையான உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்கள் அவதானமாக இருத்தல்வேண்டும். திடீரென அல்லது கடுமையான முதுகு வலி ஏட்படுகின்றபோது உதாசீனம் செய்யக்கூடாது. மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. முதுகுவலியுடன் உடல் நிறை குறைதல், காய்ச்சல், இருமல் என்பன இருந்தால் — இவை கசநோயினுடைய அல்லது புற்றுநோயினுடைய ஆரம்ப அறிகுறிகளாகக்கூட இருக்கலாம். எனவே காலம் தாழ்த்தாது அருகிலுள்ள மருத்துவரிடம், மருத்துவமனையில் காட்டி தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். இதன்மூலம்இந்தப்பிரச்னைக்கு ஆரம்பத்திலேயே தீர்வுகண்டு வீணான பின் விளைவுகளைத் தவிர்த்து ஆரோக்கியமாக நீண்டகாலம் வாழலாம்,

(சி)

## வீதிப் பஜனை

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி, ஸ்ரீ வேம்படி வீதி ஞான வைரவர் ஆலயத்தில் இருந்து உதயத்தில் காலை 4-00 மணிக்கு திருவெம்பாவை வீதிப்பஜனை ஆரம்பிக்கப்பட்டு வீதிகள் தோறும் சங்கு, சேமக்கலத்துடன் கொழும்புத்துறை சனசமூக நிலயத்தினர் பஜனை செய்து வருகின்றனர். [154]

# 442 வருடங்களாக அழியாத நிலையிலிருக்கும் சவேரியாரின் புனிதவுடல் மக்கள் பார்வைக்கு

இந்தியாவில் உள்ள கோவாமாநிலத்தின் பிரதான கத்தோலிக்க தேவாலயத்தில் கடந்த 442 ஆண்டுகளாக அழியாத நிலையில் பேணிப் பாதுகாக்கப்பட்டுவரும் புனித சவேரியாரின் அழியாத புனித உடலை தரிசிக்க வேண்டும் என்று உலகின் பல பாகங்களிலுமிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் சமயபேதமின்றி கோவா மாநிலத்தை நோக்கி தற்போது படையெடுத்த வண்ணம் இருக்கின்றார்கள்.

புனித சவேரியாரின் பூதவுடல் பல ஆண்டுகளுக்கு ஒரு தடவையே பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படுகின்றது. உலகில் தோன்றிய பல பெரியார்களின் பூதவுடல்கள் சில இரசாயன திரவங்களினால் பதனிடப்பட்டு இன்றும் பாதுகாக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஆனால் புனித சவேரியாரின் பூதவுடல் எந்தஒரு இரசாயனத் திரவங்களினாலும் பதனிடப்படாமல் இருந்து வருகிறது. இத்த அற்புதமானவரின் புனித பூதவுடலைத் தரிசிக்கும் பாக்கியம் அடுத்த ஜனவரி மாதம் 7ம் திகதி வரை பொதுமக்களிற்கு கிடைக்கும் கடந்த 442 வருடங்களில் இதுவரை 15 தடவைகளே இப்புனிதரின் பூதவுடல் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் உலகில் உள்ள கத்தோலிக்க மக்கள் மட்டுமே இப்புனிதரின் பூதவுடலை தரிசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். தற்போது இதனை தரிசிப்பதற்கு தம்மையும் அனுமதிக்கப் வேண்டும் என்று இந்தியாவில் உள்ள ஏனையமதத்தவர்கள்விடுத்த வேண்டுகோளை இந்தியாவின் கத்தோலிக்கத் தலைமைபீடம் ஏற்றுக்கொண்டதன் மூலம் மேற்படி தேவாலயத்தின் மையப்பகுதியில் கண்ணாடிக் கூட்டில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுவரும் புனிதசவேரியாரின் இந்தப் புனிதவுடலை சகலரும் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

புனித சவேரியாரின் நினைவுநாளை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 3-ம் திகதி உலகில் உள்ள கத்தோலிக்கர் கொண்டாடி வருகின்றார்கள் இவரின் பெயரில் உலக நாடுகள் முழுவதிலும் பல தேவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன. பல பாடசாலைகளுக்கு இப்புனிதரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இலங்கையிலும் இப்புனிதரின் நாமம் சூட்டப்பட்ட பல தேவாலயங்களும் பாடசாலைகளும் இருக்கின்றன. இவற்றில் மன்னாரில் உள்ள புனித சவேரியார் கல்லூரி (சென் சேவியர்) பிரபல்யமானது. யாழ்ப்பாணத்திலும் புனித சவேரியாரின் தேவாலயம் கல்வியங்காட்டில் அமைந்துள்ளது.

## வாழ்க்கை வரலாறு

ஸ்பெயின் நாட்டின் டப்பிரா மாநிலத்தில் சகிலேல் என்ற நாலுபக்கமும் மலையால் சூழப்பட்ட பகுதியில் 1506ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7ம் திகதி புனித சவேரியார் பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்தார். மிகவும் செல்வந்தரான இவரின் குடும்பம் அப்போதைய ஸ்பெயின் மன்னரின் உறவினர்களாகவும் இருந்தார்கள். தனது

தேவா

இளம் வயதிலேயே உயர் கல்விகற்று பின்பு பல்கலைக்கழக பேராசிரியராகவும் கடமையாற்றினர். 16ம் நூற்றூண்டில் முற்போக்கு எண்ணம் கொண்ட பல இளைஞர்களுடன்ஒன்றிணைந்து 'யேசு சபை' ஒன்றினை ஸ்தாபித்தார். இச்சபையின் மூலம் வறிய மக்களினதும் குறிப்பாக பின்தங்கிய மக்களின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்தார்.

இக்காலப்பகுதியில் ஸ்பெயின் மன்னனின் வேண்டுகோளின் பேரில், இந்தியாவுக்கு வந்தார். ஸ்பெயினிலிருந்து இவர் கப்பல் மார்க்கமாக. குமரிமுனைக்கு வந்து அங்கிருந்து கால் நடையாக தூத்துக்குடிக்கு வந்தார். இங்கு பல வருடங்களாக ஏழைகளுக்கு அளப்பரிய சேவைகளை செய்து வந்தார். பின்பு கேரள மாநிலமான திருவனந்தபுரத்துக்கு சென்றார். அங்கு மூடநம்பிக்கையில் மூழ்கி இருந்த மீனவர்களை மனம்மாறச் செய்தார். வாகன வசதிகள் ஏதும் இன்றி கால்நடையாகவும், தனிமனிதனாகவும் பல பாகங்களுக்கும் சென்று பணி புரிந்தார்.

இக்காலத்தில், திருவனந்தபுரத்தை ஆண்டுவந்த உண்ணிக்கிருஷ்ணன் கேரளா வர்மன் மீது பாண்டிய மன்னன்படையெடுத்தான். புனித சவேரியார் போர்க்களம் சென்று, முன்னேறி வந்த பாண்டிய மன்னனின் படை அணிக்கு முன்னால் புனித சிலுவையை உயர்த்திப்பிடித்தார். கறுப்பு உடை அணிந்த ஆயிரக்கணக்கான படை வீரர்களைத் தாண்டி எம்மால் முன்னேறமுடியவில்லை'' என்று கூறிய வண்ணம் பாண்டியப் படைகள் பின்வாங்கின. இப்புனிதரின் இந்த அற்புத புதுமையைக் கண்ட கேரளமக்கள் அவரை தெய்வமாக பூசிக்கத் தொடங்கினர்கள். தமிழ்நாட்டுக்கும்-கேரளாவுக்கும் இடையில் உள்ள 'கோவா' யூனியன் பிரதேசத்தில் புனித சவேரியார் நிரந்தர தவக்கூடத்தை அமைத்தார்.

16ம் நூற்றூண்டில் ஆசியாவில்உள்ள ஏழைமக்களின் துயர்துடைக்கும் பணியை புனித சவேரியார் ஆரம்பித்தார், இதன் முதல் கட்டமாக ஜப்பானிலும், பின்பு சீனாவிலும் இலங்கையிலும் தொண்டாற்றினார். சீனாவின் சியாங்கான் தீவில் ஏழைகளின் மத்தியில் தொண்டாற்றிக்கொண்டிருக்கையில் கடும் காச்சலினால் பீடிக்கப்பட்டார். 1552ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி பகல் 2 மணிக்கு புனித சவேரியார் இத்தீவிலேயே மரணமானார். அப்போது அவருக்கு வயது 46 புனித சவேரியாரின் பூதவுடலை சீன அரசு கௌரவமான முறையில் அத்தீவிலேயே சுண்ணும்புச் சூளையில் அடக்கம் செய்தது.

சீனாவில் அடக்கம் செய்யப்பட்ட இப்புனிதரின் பூதவுடல் தோண்டப்பட்டு, 1553ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி மலாக்கா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது. 1554ம் ஆண்டு புனித சவேரியாரின் பூதவுடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு கோவா மாநிலத்துக்குக் கொண்டுவரப்பட்டு இந்த மாநிலத்திலுள்ள மத்திய தேவாலயத்தில் வைக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இவரது புதுமையான பூதவுடல் இத் தேவாலயத்திலேயே மிகவும் பயபக்தியுடன் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. வி-சி

**மணிவாக்கு**

கடவுள் பாவங்களை மன்னிக்கிறார். இல்லாவிடில் சுவர்க்கம் காலியாக இருக்கும்.
-ஜேர்மன் பழமொழி

# அரசு அறிவிக்கும் போர் நிறுத்தத்தை ராணுவத்தினர் கடைப்பிடிப்பார்களா?

(கொழும்பு)

''விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான 2-வது கட்டச் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் அரசு போர் நிறுத்தம் ஒன்றை அமுல்படுத்த எண்ணியுள்ளது. ஜனாதிபதி திருமதி சந்திரிகாவின் இந்தத்திட்டத்துக்கு இராணுவத்தின் முழுமையான ஆதரவு கிடைக்குமா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது.

இவ்வாறு கொழும்பிலிந்து வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

போர் நிறுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்த வரையில் அதன் தலைவர் திரு. வே. பிரபாகரன் நல்லகட்டுப்பாடான விதத்தில் தமது இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கக் காணப்படுகின்றார். இந்த இயக்கத்தின் இராணுவ அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் அவரது பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ளது.

இதேபோன்று நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி திருமதி சந்திரிகா ராணுவ அரசியல் நடவடிக்கைகளில் உறுதியான தீர்மானங்களை எடுக்கும் வல்லமையைக் கொண்டவராக இருந்த போதிலும் இராணுவத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியுமா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

அண்மையில் விடுதலைப்புலிகள் ஜனாதிபதி சந்திரிகாவை கௌரவப்படுத்தும் முகமாக மேற்கொண்ட போர் நிறுத்த நேரத்தில் ராணுவத்தினர் நடாத்திய அத்துமீறல்கள் விடுதலைப்புலிகளுக்கு பெரும் ஆத்திரத்தையும், ஜனாதிபதி திருமதி சந்திரிகாவுக்கு சினத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் செய்திருந்த வேளையில் அந்த இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரான மல்லி படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மோதல்களில் இருதரப்பினரும் கொல்லப்படுவது சகஜம் ஆனால், மல்லியைக் கொன்ற இராணுவத்தினர் நடந்துகொண்ட விதம் விடுதலைப்புலிகளுக்கு பெரும் ஆத்திரத்தை ஊட்டுவதாகவே அமைந்து விட்டது.

மல்லியைக் கொன்ற இராணுவத்தினர். அவரது தலையை துண்டித்துச்சென்று தமது வீரப் பிரதாபத்துக்கு சான்று பகன்றிருந்தார்கள்.

இச்செயலானது இராணுவத்தினர் மத்தியில் நிலவி வரும் வக்கிரமான போர்க் குணத்தையே புலப்படுத்துவதாக இருக்கின்றது, வடக்கு கிழக்கு யுத்தம் கடந்த பத்து வருடங்களாகபூதாகாரமாசத் தோற்றம் பெற்றதற்கும் படையினரின் இந்த அத்துமீறல் நடவடிக்கைகளே முக்கிய காரணமாக அமைந்தது.

இராணுவத்தினரின் இக்கொடூர நடவடிக்கைகளுக்கும் அத்துமீறல் செயல்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகா துணிந்து விலங்கிட்டு வைக்காவிட்டால், அவரது சமாதான முயற்சிகளும், யுத்தநிறுத்த ஏற்பாடுகளும் ஒரு பயனற்ற செயலாகவே முடிந்துவிடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வி-சி

## நமது நோக்கு

### தொட்டிலிற் பழகியதா?

தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

இங்கு — நீண்ட நெடுங்காலமாகத் தமிழ்மக்களை அடக்கி ஒடுக்கும் நோக்கோடு, இராணுவத்தையும், பொலிஸ் சேனையையும் அரசு பயன்படுத்தி வந்தது.

அதனால் —பாதுகாப்புச் சேவை என்பது அடாவடித்தனச் சேவை என்ற கருத்தே மேலோங்கிவிட்டது.

இதனை அவதானித்த சர்வதேச மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கும் பல குழுக்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டன.

இவற்றைக் கண்ட பின்னராவது, தமது தொட்டிற் பழக்கத்தை மாற்ற நினைத்தார்களா?

மக்கள் பாதுகாப்புச் சேவை என்பது, அரசில் இருந்தோரைப் பாதுகாக்கும் சேவை என்றும் கருதப்பட்டதால் முன்னைய அரசுகள் கண்டன அறிக்கைகளைக் 'கண்டும் காணாமல்' இருந்தன.

எதிர்க்கட்சியாக இருந்தவர்கள், புதைகுழிகளைத் தோண்டி, அடாவடித்தனங்களை உணரச்செய்து தொட்டிற் பழக்கத்தை மாற்ற முயற்சித்தனர்.

ஆனால் — எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறியதும் மறந்த பலவற்றுள் இராணுவத் தர்பாரும் ஒன்றாகிவிட்டதா?

இக்கேள்வியை எழுப்புவதன் காரணம் என்ன?

நீர்கொழும்பில் விமானப்படையினர் பொதுமக்கள் மோதல் எனச் செய்தி வந்துள்ளது.

வாகனத்தில் வந்தவர்கள் வாய்ச் சண்டையை ஆரம்பித்தனர்; அது வெற்றி அளிக்கவில்லை. எனவே தொட்டிற் பழக்கம் தலைகாட்டியது. விளைவு? பொதுமக்களில் ஒருவர் பலி; மூவர் படுகாயம்.

இதேபோல- புல்மோட்டையில் பொலிஸாரின் சுற்றிவளைப்பு; அது கைதோடு முற்றுப்பெறும் எனத்தான் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் — இராவணனிடம் தூதாக வந்த பெரியாரின் பாணியில், பழக்க தோஷத்தால், ஒன்பது வீடுகளும், நான்கு கடைகளும் நாசமாகின.

இதேபோலத்தான் — மண்டைதீவுக் கடற்பகுதியில் மீனவர்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

முறையான போர் நிறுத்தம் வரும்போது இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதிருக்க அரசு உறுதியோடு செயற்படவேண்டும்.

## பலதும் பத்தும்

### இந்து தர்மம்

யாழ். இந்துசமயப் பேரவையின் வெளியீடான ''இந்து தர்மம்'' மூன்றாவது இதழ் நாவலர் குருபூசை மலராக மலர்ந்துள்ளது.

நாவலர் பற்றிய கலாநிதி சி. க சிற்றம்பலத்தின் கட்டுரையோடு, திருமுறை, மார்கழி மாதம், சைவசித்தாந்தம், நவக்கிரகங்களில் சூரியன், தெய்வீக வாழ்க்கை, பரிசிலுக்காகச் சிவகைங்கரியம் செய்வதில்லை, விபூதி போன்ற பல கட்டுரைகள் சிறந்த கல்விமான்களால் எழுதப்பட்டுள்ளன.

விழாக்கள் மாத்திரம் தான் சமயம் என்ற மாயையைநீங்கி,'அறவாழ்க்கைக்கு இட்டுச்செல்ல இத்தகைய ஆன்மீக வெளியீடுகள் அவசியம்.

திரு. ந. தெய்வேந்திரன், உடுவில் சைவ அபிமானிகள், நல்லூர் சைவஅபிமானிகள் ஒவ்வோர் இதழ் வெளிவர நிதி உதவி செய்துள்ளார்கள். நல்ல புது முயற்சி.

—மயூரன்

## இராசி பலன்

**18 - 12 - 1994**

ஞாயிற்றுக்கிழமை

**(தமிழுக்கு மார்கழி 03)**

பூரணை முற்பகல் 8-30 வரை, மிருகசீரிடம் மாலை 5-14 வரை- சித்தயோகம் இராகுகாலம் மாலை 4-53 முதல் 6.23 வரை. சுபவேளை காலை 9-23 முதல் 10-53 வரை.

மேடம்: ஆரோக்கியக் குறைவு. மனக் கவலை, வெறுப்பு

இடபம்: தொழில் லாபம், எதிர்பாராத லாபம், வெற்றி

மிதுனம், குரோதம், பணக் கஷ்டம், யோசனை

கடகம்: அதிகாரமேன்மை, பொருள் லாபம், நண்பர் சகாயம்

சிங்கம்: சுபகாரியம், செல்வாக்கு, பயணம்

கன்னி: ஜீவன கஷ்டம்; மனக்கலக்கம், காரியத்தடை

துலாம்: சுபவிரயம், தொல்லைகள், குடும்பக் கவலை

விருச்சிகம்: புதிய கற்பனை, சாமர்த்தியம், பொதுப்பணி

தனுசு; தொழில் ஊக்கம், குடும்பச் சிறப்ப, கலகலப்பு

மகரம்: முரண்டு பிடித்தல், வேலைப்பளு, மறதி

கும்பம்: கொடுக்கல் வாங்கல் பிணக்கு, மனப்பயம், விரோதம்

மீனம்: புத்தி சபலம், வேண்டியன நிறைவேறல், வஸ்திர லாபம்

ஜோஸ்யர்

# 75 பொலிஸ் படையணிகள்

### வடக்கு கிழக்கிலிருந்து

# தெற்கே இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து 75 பொலிஸ் படையணிகள் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக வடக்கு - கிழக்கில் கடமையாற்றி வந்த பொலிஸ் படையணிகளே தெற்கிற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கிருந்து படையணிகள் வடக்கு - கிழக்கிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் தற்போது 60 வழமையான பொலிஸ் படையணிகளும் 590 ரிசேவ் பொலிஸ் படையணிகளும் கடமையாற்றி வருகின்றன, இராணுவத்தின் விசேட பயிற்சி பெற்ற பொலிஸார் வடக்கில் பல வருடங்களாக இடமாற்றமின்றி கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் தெற்கிலிருந்து புதிதாக பல படையணிகள் வடக்கு - கிழக்கிற்கு இடமாற்றம் செல்யப்பட்டபோது அதில் பலர் சுகவீன லீவில் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-12-18**

ஞாயிறு இரவு

| | |
|---|---|
| 08-01 | இசையரங்கம் நிகழ்ச்சியில் ந. ராஜன், சூ. கண்ணன் அவர்களின் நாதஸ்வரக் கச்சேரி |
| 08-30 | செய்திகள் |
| 08-40 | தொடர் நாடகம் பொன். கணேசமூர்த்தி எழுதும் ''இலங்கைமண்'' 51-ம் அங்கம் |
| 09-00 | இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

**1994—12—19**

திங்கள் காலை

| | |
|---|---|
| 07-02 | மாவீர வணக்கம் |
| 07-15 | நீங்கள் கேட்டவை |
| 07-30 | செய்திகள் |
| 07-35 | பத்திரிகைச் செய்திகள் |
| 07-40 | நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி |
| 08-00 | காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும் |

## இன்று

(கொழும்புத்துறை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் ''உலகத்தமிழர் குரல்'' பத்திரிகை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு இல. 35, பருத்தித்துறை வீதியிலுள்ள இயக்கப்பணிமனையில் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.
-154

0 0 0

[கொழும்புத்துறை]

சாவகச்சேரி தென்மராட்சி திவ்யஜீவன சங்கமும், இந்து இளைஞர் சங்கமும், இந்துஇளைஞர் பேரவையும், தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியமும், இந்து சமய நிறுவனங்களும், கோயில் தர்மகர்த்தா சபையும் கூட்டாக இணைந்து வழங்கும் மார்கழி மாத திருவெம்பாவை முற்றோதல் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6-00 மணி முதல் மட்டுவில் - கெருடாவில் ஸ்ரீவீரபத்திரர் கோயிலில் நடைபெறும்.
- 154

0 0

]யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி வடக்கு சனசமூக நிலையத்தில் இன்று ஞாயிறு மாலை 4 மணியளவில் 35 பேருக்கு யாழ். லயன்ஸ் கழகத்தால் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும், இந்நிகழ்வில் 'நீரிழிவு வராமல் காப்பதெப்படி' என்பது பற்றி டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறனும். ''வாய்ச் சுகாதாரம்'' என்பது பற்றி டாக்டர் ஜீவானந்தமும் உரையாற்றுவார்கள்.
-சி

0 0

(யாழ்ப்பாணம்)

தமிழ் சேரதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும் ஆய்வரங்கும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும்: இன்றைய ஆய்வரங்கில் மாணவர்களான திரு; எம். சுரேஷ், ஆர். தயாபரன் திருமதி ஏ. முத்துமலர் பங்கு கொள்ளும் பொது விவாதமும், தொடர் விரிவுரையை

### ஒய்வூதிய வவுச்சர்

[மானிப்பாய்]

யாழ். மாவட்ட ஒய்வூதியர்களின் இம்மாதத்திற்குரிய [டிசம்பர்] ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ், செயலக ஒய்வூதியப் பிரிவுக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் அலுவலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்,
-71

ப. கனகலிங்கமும், எஸ், பத்மநாதனும் நிகழ்த்துவர். பயிலரங்கு கே. சாம்பசிவத்தினால் நடாத்தப்படும். -எஸ்

0 0 0

(யாழ்ப்பாணம்)

நோயாளா நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் தமிழீழ தேசியத்தலைவரின் நாற்பதாவது அகவையை முன்னிட்டும், மாவீரர் தினத்தை முன்னிட்டும் யாழ். பொது மருத்துவமனை குருதி வைப்பகத்திற்கு குருதிக் கொடை அளித்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நடைபெறும்,

0 0 0

[யாழ்ப்பாணம்)

கடற்புலிகளின் வலிகாமம் வடக்கு உட்பட்ட மாவீரர்களின் நினைவுக்கூட்டம் இன்று ஞாயிறு இரவு 7-00 மணியளவில் சுழிபுரம் ருத்தலடி பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. இதில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் உரைகளைத் தொடர்ந்து தமிழீழ இசைக் குழுவினரின் இசை விருந்தும் நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரேசனடி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் ஆலயத்தில் இன்று காலை 9-00 மணிக்கு நடராசப் பெருமானுக்கு தேர் உற்சவமும் நாளை திங்கள் அதிகாலை 3-00 மணிக்கு வசந்த மண்டபத்தில் அபிஷேகமும் காலை 5-00 மணிக்கு ஆர்த்திரர தர்சனமும் இடம் பெறும்.

# அதிகார துஷ்பிரயோகமே ஐ. தே. கவின் தோல்விக்குக் காரணம்

– ரணில் ஒப்புக்கொள்கிறார்

(கொழும்பு)
கட்சி உறுப்பினர்கள் சிலர் பதவியிலிருந்தபோது, தவறான முறையில் அதிகாரத்தை பயன்படுத்தியதும், சிறு ஊழல்களுமே பொதுமக்களுக்கும் கட்சிக்குமிடையிலான உறவுகளை விரிசல் அடையச் செய்தன என்று ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் 40வது வருடாந்த மகாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், சட்டத்தின் முன் குற்றவாளிகளாகக் காணப்படும் எந்தவொரு உறுப்பினரையும் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு நான் பின்நிற்கப்போவதில்லை. எதிர்காலச் சவால்களை முகம் கொடுக்கும் விதத்தில் ஐக்கியதேசியக்கட்சி புனரமைக்கப்படவுள்ளது. வன்செயல்களையும் அழிவு நடவடிக்கைகளையும் எமது கட்சி எப்போதும் கண்டிக்கும்.

பொதுசன ஐக்கியமுன்னணி அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் பொதுசன ஐக்கிய முன்னணியின் முற்போக்கு நடவடிக்கைகள் எதற்கும் ஐக்கியதேசியக் கட்சி தடையாக இருக்கமாட்டாது'' என்றார். ம-சி

# அமெரிக்க ஹெலியை வடகொரியா சுட்டது

(சோல்)
அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று வடகொரியாவினால் சுட்டு இறக்கப்பட்டதுடன் அதிலிருந்த விமானிகளும் உயிருடன் வடகொரிய படையினரால் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்குமிடையில் இருக்கும் இராணுவ தாக்குதலற்ற எல்லைப் பகுதிக்கு அருகில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க ஹெலிகொப்டர் வடகொரிய எல்லைக்குள் சென்றபோது சுட்டு இறக்கப்பட்டதாக வடகொரிய அறிவித்துள்ளது.

இதிலிருந்த இரு விமானிகளும் தம்மால் விசாரிக்கப்பட்டுவருவதாக வடகொரியா கூறியுள்ளது. இவர்களை விடுவிக்குமாறு அமெரிக்கா வடகொரியாவை கோரியுள்ளது. சி

# 20 லட்சம் அரச ஊழியரை சீன வேலைநீக்கம் செய்யும்

(பீக்கிங்)
சீன அரசாங்கம் 20 லட்சம் அரச ஊழியர்களை அரச திணைக்களங்களிலிருந்து அடுத்த வருடம் வேலை நீக்கம் செய்யவுள்ளது.

சீனாவில் கடந்த நான்கு தசாப்தங்களாக அரச ஊழியர்க்கு வழங்கப்பட்டு வந்த வாழ்நாள் தொழில் பாதுகாப்பை கம்யூனிஸ்ட் தலைவர்கள விலக்கிக் கொள்ள முன் வந்துள்ளதையடுத்தே 20 லட்சம் அரச ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இந்த சீர் திருத்தங்களை மேற்கொள்ளும் முக்கிய கால கட்டமாக அடுத்த ஆண்டு விளங்கவுள்ளதாக ஆளணி அமைச்சர் திரு. சொங் டெபோ அரசாங்க புனரமைப்பு சம்பந்தமான யாநாடொன்றில் பேசுகையில் கூறியுள்ளார்.

20 லட்சம் நிர்வாக ஊழியர்களை சேவையிலிருந்து நீக்கிக் கொள்ளும் நடவடிக்கையால் சகல அலுவலகங்களும் வெகுவாக பாதிக்கப்படுமென்றும் இந்த ஆட்குறைப்பு நடவடிக்கை 1995ம் ஆண்டு முடிவில் பூர்த்தியடையுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. -சி

அடுத்த மாதம்
[1ம் பக்கத் தொடர்ச்சி]
இதேவேளை எதிர்க்கட்சியைக் சேர்ந்தவரும், பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகனுமாகிய திரு. அனுரா பண்டாரநாயக்காவைத் திருமணம் செய்து கொள்ளுமாறு குடும்பத்தவர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்களாம். -சி

ஐ.தே.க.
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஐ, தே. கவின் நேற்றைய வருடாந்த மாநாடு கவர்ச்சிகரமாக இருந்ததாகவும் இதில் நாடெங்கிலுமிருந்து வந்து ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் கலந்துகொண்டதாக பி. பி. சி. தெரிவித்தது. (ம-சி)

## 'வெளிச்சம்' நாளை வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' மார்கழி இதழ் நாளை வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய மாவீரர் நாள் செய்தியுடன் பிரம்மஞானியின் 'அபத்தமும் அர்த்தமும்' தொடர்கட்டுரை, இயல்வாணனின் சிறுகதை, அடேல் ஆனின் 'உடையாத விலங்குகள்' தொடர்கட்டுரை, நா. யோகேந்திரநாதனுடனான நேர்காணல் சோ. கிருஸ்ணராசாவின் 'அமைப்பியல் வாதம்' பற்றிய கட்டுரை ஆகியன இடம்பெறுகின்றன. இன்னும் வீ. பரந்தாமன், பொன்னிலா, த. ஜெசீலன், புதியபாரதி, ம. ஆனந்தன், மீசாலையூர்க் கமலா ஆகியோரின் கவிதைகளையும் தாங்கி இந்த இதழ் வெளிவருகின்றது.

இது வெளிச்சத்தின் முப்பத்தி இரண்டாவது இதழ் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

2ம் கட்ட பேச்சு
(1ம் பக்கத் தொடர்ச்சி)
களை அவதானித்து விட்டுத்தான் இந்தியா தனது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தீர்மானிக்கும்.

இலேவேளை அரச தரப்பினரின் இந்திய விஜயங்களின் போது இந்தியா, இலங்கை அரசு-விடுதலைபபுலிகள் நடாத்தவுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது. [ரி-சி)

# 9 பிரிகேடியர்களுக்கு பதவி உயர்வு!

]கொழும்பு]
இராணுவத்தில ஒன்பது பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் பதவிக்குத் தரமுயர்த்தப்பட்டுள்ளனர்,

இராணுவத்தை சீரமைக்கும் திட்டங்களின் கீழ் இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இராணுவத்தில சிரேஷ்ட அதிகாரிகளை விட்டு இளம் அதிகாரிகளுக்கு பதவிஉயர்வு வழங்கி அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு இராணுவத்தில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இ-சி

படையினர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யொன்று தகவல் தெரிவித்துள்ளது.

பாதை திறப்பு விடயத்தில் தமது நிலைப்பாட்டை இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஜனதிபதிக்கும், பிரதிப் பரதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்தே இந்த விடயதில் ஜனதிபதி சந்திரிகா மிக மெதுவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். பாதை திறக்கும் விடயத்தில் நிபந்தனைகளை முன்வைக்கும் இராணுவத்தினர் யுத்த நிறுத்த விடயத்திலும் அரசுக்கு சில வற்புறுத்தல்களைக் கொடுத்து வருகிறார்களாம்.

இந்நிலையில் அரசு சமாதானப் பேச்சுக்களையும் ஏனோ தானோ என்ற நிலையில் தான் தொடர்ந்தும் நடாத்தும் நிலை ஏற்படும் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

சந்திரிகா அரசை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கு ஐ. தே. க.வே காரணம் என்றும் தமது அரசைக் கவிழ்க்கும் நோக்கிலே ஐ,தே, க. செயற்பட்டு வருவதாகவும் ஜனதிபதி சந்திரிகா கூறுவது முற்றிலும் பொய்யானது. பிரச்னைகளை எதிர்கொள்ள முடியாதநிலையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார், பொதுத் தேர்தலில் அவர்கள் பல வாக்குறுதிகளை முன்வைத்தனர். அவற்றை நிறைவேற்ற நாம் அவர்களுக்கு சந்தர்ப்பமளிப்போம் என்றார்.

தமது கட்சி எதிர்நோக்கும் பல பிரச்னைகளையும் அதனை தீர்க்க கட்சி அங்கத்தவர்கள் தமக்கு உதவவேண்டுமென வும் கேட்டுக்கொண்டார். -சி

## பட்டம் விட்ட சிறுவன் கிணற்றில் வீழ்ந்து பலி

(நெல்டியடி)
தோட்டவெளியில் பட்டம் ஏற்றி விளையாடிய 10 வயதுச் சிறுவன் ஒருவர், தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்தார். இச் சம்பவம் கடந்த புதன்கிழமை காலை 9-00 மணியளவில புலோலி மேற்கில் உள்ள தெணித்தோட்டம் என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

புலோலி மேற்கு வியாபாரி மூலையைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை சோதிரூபன (வயது10) என்னும் சிறுவனே மரணம் அடைந்தவராவர். -160

# வலிவடக்கு பகுதியில் படையினர் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம்)
அளவெட்டிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். நேற்று முன்தினம் பகலும் இரவும் இத்தாக்குதல் நடத்தப்பட்டது. மேலும் கடந்த சில தினங்களாக வலிகாமம் வடக்கில் படையினர் பிடியிலுள்ள பகுதியில் குண்டுச் சத்தம் கேட்கிறது. இப் பகுதியின் எல்லைப் புறங்களில் படைவிமானங்களின் நோட்டமும் அதிகரித்துள்ளது,

இதேவேளை மண்டைதீவு படையினரும் ஷெல் தாக்குதலில் இறங்கியுள்ளனர். நேற்றுமாலையும் சில பகுதிகளில் ஷெல் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. சி

உலக வங்கி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டது.

யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்பு பற்றிய கருத்தரங்கொன்றில் மேற்படி விடயம் சம்பந்தமாக ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் எமது பிரதேசத்தின் அவசர புனர்வாழ்வு புனரமைப்புபற்றிய விடயங்கள் ஆராயப்பட்டது. இதன் அடிப்படையில் இன்றைய எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி விவசாய உற்பத்தி, மீன்பிடித் தொழில் சுகாதாரம், கைத்தொழில் போன்ற விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதென்றும் உலக வங்கிப் பிரதிநிதிகளின் வருகைக்கு முன்னதாக இத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாம். 162-சி

அரசு—புலிகள்
[1ம் பக்கத் தொடர்ச்சி]
குழுவை புலிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற போதும் அரசு தரப்பு இன்னமும் அடுத்தகட்ட பேச்சுக்கான திகதியை குறிப்பிடவில்லை. இராணுவத்தினரின் அழுத்தங்களை வெற்றி கொள்ள முடியாத நிலையில் ஜனதிபதி சந்திரிகா இருப்பதே இதற்கு காரணமெனவும் கருதப்படுவதாக அந்த 'ஏஜென்ஸி' செய்தி கூறியது. சி

சமஷ்டி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
போதே திரு. ஹன்சாட் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்; சமஷ்டி அமைப்பு என்றால் அது பிரிவினைவாத போக்கிற்கு இடமளிக்குமென அரச தரப்பினர் கூறுவது நகைப்புக்கிடமானது

இனப்பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டி அமைப்பை முன்வைப்பதை பல சிங்கள அமைப்புகள் வன்மையாக எதிர்க்கின்றன. இதனை கருத்தில் கொண்டு திரு. ஹன்சர்ட், சர்வதேச நாடுகளிலுள்ள சமஷ்டி அமைப்புகள் பற்றி கூறினார்.

அதிகாரப் பரவலாக்கலின் அச்சாணியாகவும் மத்திய அரசு தான் வைத்துள்ள பிடிகளை தளர்த்துவது சமஷ்டி அமைப்பு முறைகளில் ஒன்றாகும் என்றார்.

இதில் கலந்து கொண்ட பலரும் இனப்பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு காணப்படவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியதும் குறிப்பிடத்தக்கது, (சி)

புத்தகவிவகாரம்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் கூறுகையில்: தமது புத்தகத்தில் பௌத்த மதம் சம்பந்தமாக போப்பாண்டவர் கூறிய கருத்துக்கள் பிழையானவை அது பௌத்த குருமாரின் உள்ளங்களை புண்ணாக்கியுள்ளது என்று போப்பாண்டவருக்கு உத்தியோக பூர்வமாக கத்தோலிக்க சபை தெரிவிக்க வேண்டும் என்றார்.

போப்பாண்டவரால் எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தில இஸ்லாம் மதம். பௌத்த மதம் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன பௌத்த மதம்பற்றிய கருத்துக்களுக்கே பௌத்த குருமார்கள் தமது கடும் ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்கள்.

இருந்தபோதிலும் ஐரோப்பாவில் இந்தப் புத்தகம் வேகமாக விற்கப்பட்டு வருகிறது.

இந்தப் புத்தகத்தில் ஜேர்மன் மொழிபெயர்ப்புப் புத்தகம் மாத்திரம் 2 லட்சத்துக்கு மேல் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. ம-சி

இனப்பிரச்னை
1ம் பக்கத் தொடர்ச்சி)
முயல்கிறது.

யார் எது சொன்னாலும் இலங்கை இனப் பிரச்னை விவகாரத்லிருந்து இந்தியாவை முற்றாக ஒதுக்கிவைக்க முடியாது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு இந்தியாவுடன் நட்புக் கொண்டபடி விடுதலைப் புலிகளோடும் நட்பு கொள்ள நினைக்கிறது. புலிகளுடன் பேசும் அதே நேரத்தில் இந்தியாவுக்கு விரோதமாக நடக்கவில்லை என்று இந்தியாவிடம் தெளிவுபடுத்தவும் சந்திரிகா அரசுவிரும்புகிறது.

ஜே. ஆர், பிரேமதாசா, விஜயதுங்கா அரசுகள் செய்யாத சில விடயங்களைக் கூட சந்திரிகா அரசு இந்தியாவிற்கு சார்பாக செய்துள்ளதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. ரி-சி

## மாணவர்களுக்கான உணவு முத்திரைகள் வந்துள்ளன

(மானிப்பாய்)
யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகள் கொழும்பிலிருந்து யாழ்.சமூகசேவைப் பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்துள்ளது. -71

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-